# என்னுடைய அடையாள விவரம்

## ஒவ்வொரு முறையும்

எந்த சேவையினையும் அல்லது பராமரிப்பினையும் வழங்கும் முன் நாங்கள இரு விதமான வாடிக்கையாளர் அடையாள விவரங்களை எப்போதும் கேட்போம். இந்த நடைமுறை சரியான வாடிக்கையாளர் எப்போதும் சரியான சேவை, செயல்முறை அல்லது மருந்தினை ஒவ்வொரு முறையும் பெறுகிறாரா என்பதை உறுதி செய்கிறது.





## ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை பற்றி

ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையானது குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் வாழ்க்கையினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்திவரும் கனடாவின் மாபெரும் குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையாகும்.

பயன்பாட்டு ஆராய்ச்சி, கற்பித்தல் மற்றும் கற்றல், மற்றும் வாடிக்கையாளர் மற்றும் குடும்பம் மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஆகியவற்றில் ஹோலண்ட் ப்ளூர்வியூ ஒரு உலகளாவிய தலைவர்.

நாங்கள பெருமூளை வாதம், மூளையதிர்ச்சி உட்பட்ட மரபணுசாராத மூளைக்காயம், தசைநார் தேய்வு, உடல் உறுப்பு துண்டிக்கப்பட்ட, கால்-கை வலிப்பு, ஸ்பைனா பிஃபிடா (மூடப்படாத முதுகுத்தண்டு குறைபாடு), கீல்வாதம், பிளவுபட்ட உதடு மாற்றும் தாடை பிரச்சனை, ஆட்டிசம் மற்றும் பிற உடல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் போன்ற குறைபாடுள்ள குழந்தைகளுக்கான ஒரு மாகாண ஆதார மாற்ற பாதுகாப்பு சேவை மையம் ஆகும்.

ஊனமுற்ற குழந்தைகளுக்கான சாத்தியமான உலகத்தை உருவாக்குவதே எமது நோக்கம் ஆகும்.




**ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை**

[1326.17]

150 கேஇில்கோர் சாலை, டொராண்டோ, ஒண்டாரியோ M4G 1R8
தொலைபேசி: 416-425-6220 கட்டணமில்லா இலவச அழைப்பு: 800-363-2440
தொலைநகல்: 416-425-6591 | மின்னஞ்சல்: info@hollandbloorview.ca
www.hollandbloorview.ca

# பாதுகாப்பில் உங்கள் பங்கை புரிந்து கொள்ளுதல்: வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்கள்

## பங்கேற்பு மற்றும் சேர்த்துக்கொள்ளல்

Holland Bloorview

Kids Rehabilitation Hospital

உங்கள் பாதுகாப்பே ஹாலந்து ப்ளூர்வியூவின் முன்னுரிமை ஆகும்.

நீங்கள், உங்கள் குடும்பம் மற்றும் மருத்துவமனையில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்க உதவுவதற்காக இந்த உதவிக்குறிப்புகளைப் பின்பற்றவும்.

## கை கழுவுதல்

உங்கள் கைகளை சுத்தம் செய்தல் கிருமிகள் மற்றும் நோய்த்தொற்றுகளின் பரவலைக் குறைக்கும்.

- நீங்கள் மருத்துவமனையிலும் வாடிக்கையாளர் அறைக்குள்ளும் நுழையும்போது, உணவு அருந்துவதற்கு முன் மற்றும் பின்னர், கழிவறையினை பயன்படுத்திய பிறகு மற்றும் இருமல் அல்லது தும்மலுக்குப் பிறகு சுத்திகரிப்பான் அல்லது சோப்பு மற்றும் தண்ணீருடன் உங்கள் கைகளைக் கழுவவும்.
- கை கழுவிய பின்னர் நீங்கள் எதையும் தொடுவதற்கு முன் உங்கள் கைகளை காய அனுமதிக்கவும்.
- நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், நீங்கள் மருத்துவமனை அப்பாயின்மென்ட்டினை மறுபதிவு செய்ய நேரலாம் என்பதால் மருத்துவமனையை அழைக்கவும்.
- உங்கள் உடல்நல பராமரிப்பாளரிடம் அவர் சுத்தப்படுத்தி உள்ளாரா அல்லது கைகளை கழுவிவிட்டாரா என்பதை கேளுங்கள்.
- உங்கள் வீட்டிற்கு வருகை தரும் மருத்துவர்கள் தங்கள் கைகளை சுத்தம் செய்யும் பொருட்களை கொண்டு வருவார்கள்.

## விழுதலை தடுத்தல்

- நீங்கள் / உங்கள் குழந்தை விழும் ஆபத்து இருப்பதாக உணர்ந்தால் இது பற்றி உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள் மற்றும் விழாமல் தடுப்பதற்கு நீங்கள் என்ன மாதிரியான உத்திகளைப் பயன்படுத்துவீர்கள்.
- நிகழ்ச்சியில் உங்கள் குழந்தையினை விடுவதற்கு முன்னும் நிகழ்ச்சியிலிருந்து அழைத்துச்சென்ற பின்னும் உங்கள் குழந்தையை மேற்பார்வை செய்யவும்.
- நீங்கள் / உங்கள் குழந்தை உங்களுடைய சிகிச்சை அமர்வுக்கு பொருத்தமான காலணி அணிந்துள்ளீர்களா என்பதை உறுதி செய்யவும்.
- நீங்கள் / உங்களுடைய குழந்தை விழுவதை உங்கள் பராமரிப்பு வழங்குநர் அதை கவனிக்கவில்லை எனில், அவர்களிடம் கூறவும்.

## உபகரண பாதுகாப்பு

- நீங்கள் / உங்கள் குழந்தையின் உபகரணங்கள் சரியாக வேலை செய்கின்றதா என்பதை உறுதி செய்யவும்.
- சரியான முறையில் உபகரணங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி உங்கள் / உங்கள் பிள்ளையின் குழுவிடம் பேசுங்கள்.
- உங்கள் / உங்களுடைய குழந்தையின் பெயருடன் சாதனங்களை தெளிவாக லேபிள் செய்யவும்.

## மருந்து பாதுகாப்பு

- அனைத்து மருத்துவ படிவங்களையும் துல்லியமாக முடிந்தவரை விரைவில் நிரப்பி முடிக்கவும்.
- அனைத்து மருந்துகளையும் அவற்றின் அசல் கொள்கலன்களில் மருந்தகத்தின் லேபிள்களுடன் கொண்டு வாருங்கள்.
- மருந்துகள் காலாவதியாகவில்லை என்பதை உறுதி செய்யவும்.
- திட்டத்தின் முதல் நாளில், செவிலியர் ஒருவர் மருந்து நிர்வாகம் பதிவுகளை நிறைவு செய்வார் மற்றும் மருந்து குறித்த தகவல்கள் சரியாக உள்ளதா என்பதை நீங்கள் சரிபார்த்துக்கொள்ள அறிவுறுத்துவார்.
- மருந்துகளை எடுத்துக் கொள்ள தேவையான பொருட்களை கொண்டு வரவும்.
- திட்ட ஊழியர்கள், தூக்க மருந்து போன்ற சில மருந்துகளை ஒரு பாதுகாப்பான சேமிப்பு கொள்கலனில் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

**குறிப்பு: அசல் கொள்கலனில் இல்லாத மருந்துகள், அதற்கான தற்போதைய லேபிள்கள் இல்லாமல் அல்லது காலாவதியான மருந்துகள் உங்கள் குழந்தையின் இத்திட்டத்தில் அவர்களின் பங்களிப்பை தாமதப்படுத்தும்**



வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மருந்து பிழைகள் ஏற்படுவதை தடுக்க உதவ இயலும்.



## வாடிக்கையாளரகளின் அடையாளம்

முதல் வருகையோ அல்லது ஒவ்வொரு வருடத்திலும் பல்வேறு முறை வருகை புரிந்தாலும், ஒவ்வொரு வருகையின்போதும் உங்கள் உடல்நலக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் உங்களுடைய / உங்கள் குழந்தையுடைய இரு அடையாள விவரங்களை கேட்பார்கள். அடையாள விவரங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்: பெயர், பிறந்தநாள், தொலைபேசி எண், வீட்டு முகவரி, சுகாதார அட்டை எண்.

நீங்கள் / உங்கள் குழந்தை ஒவ்வொரு முறையும் சரியான சேவையினையும், சரியான சிகிச்சையினை பெறுவதையும் இது உறுதி செய்கிறது.

## பேசுங்கள்

ஹாலந்து ப்ளூர்வியூ உங்கள் குழந்தைக்கு அளிக்கப்படும் சுகாதார பராமரிப்பு சேவை பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளது, உங்களுக்கு ஏதேனும் கவலை இருப்பின், தயவுசெய்து உங்கள் குழந்தையின் சுகாதாரப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினருடன் பேசவும், அல்லது நோயாளி பாதுகாப்பு மேலாளரிடம் பேச வேண்டும் என்று கேட்கவும்.

**ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருப்பின் தயவுசெய்து நோயாளியின் பாதுகாப்பு மேலாளரை 416-425-6220 Ext. 6235 என்னும் எண்ணில் தொடர்பு கொள்ளவும்**